www.Padasalai.Net

063556
JDNSS

**01.09.2024 முதல் 30.11.2024 மூன்று மாதங்களுக்கு சம்பளம் வழங்கும் அதிகாரம்.**

வாய்மையே வெல்லும்

**பள்ளிக் கல்வித் துறை,**
**தலைமைச் செயலகம்,**
**சென்னை – 600 009**

23 SEP 2024

**கடித(efile)எண். 8514 /பக5(1)/2023–1, நாள்:13.09.2024**

அனுப்புநர்
திருமதி. சோ.மதுமதி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை–01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி – 2014–2015–ஆம் கல்வி ஆண்டில் அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரை பிரித்து 20 அரசு மகளிர் உயர் நிலைப்பள்ளிகள் ஏற்டுத்துப்பட்டது – 20 உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது– இப்பணியிடங்களுக்கு 01.06.2021 முதல் 31.05.2024 வரை தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டது – இப்பணியிடங்களுக்கு 01.06.2024 முதல் 31.08.2024 வரை மூன்று மாதத்திற்கு பள்ளிக் கல்வி இயக்குநரால் விரைவு ஊதிய கொடுப்பாணை (Express Pay Order) வழங்கப்பட்டது – 01.09.2024 முதல் 30.11.2024 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorization) வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.65, பள்ளிக்கல்வி பக5(1))துறை, நாள். 21.05.2014.
2. அரசாணை (நிலை) எண்.66, பள்ளிக்கல்வி பக5(1))துறை, நாள். 21.05.2014.
3. அரசாணை (1டி) எண். 122, பள்ளிக் கல்வி பக5(1)துறை, நாள். 12.05.2022.
4. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறை ந.க. எண். 022019 /எல்/இ3/2021, நாள். 29.05.2024.
5. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.022019/எல் / இ3/2021, நாள். 19.08.2024.

-------

www.Padasalai.Net

பார்வை 1 மற்றும் 2–இல் காணும் அரசாணைகளில் 2014–2015– ஆம் கல்வியாண்டில் இருபாலர் பயிலும் அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரை பிரித்து புதிதாக முறையே 11 அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளும், 9 அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளும் துவக்கிட அனுமதி அளித்தும், அவ்வாறு துவக்கப்பட்ட அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு முறையே 11 மற்றும் 9 உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள் என மொத்தம் 20 தலைமையாசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பபட்டன. பார்வை 3–இல் காணும் அரசாணையில் இப்பணியிடங்களுக்கு 01.06.2021 முதல் 31.05.2024 வரை தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டது. பார்வை 4 –இல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி இப்பணியிடங்களுக்கு 01.06.2024 முதல் 31.08.2024 வரை மூன்று மாதங்களுக்கு விரைவு ஊதிய கொடுப்பாணை (Express Pay Order) வழங்கப்பட்டு முடிவுற்ற நிலையில், 01.09.2024 முதல் 28.02.2025 வரை மேலும் ஆறு மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் பார்வை 5–இல் காணும் கடிதத்தில் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, மேற்குறிப்பிட்டுள்ள 20 தற்காலிக தலைமை ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.09.2024 முதல் 30.11.2024 வரை மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான 01.09.2024 முதல் 30.11.2024 வரை மூன்று மாதங்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. இக்கடிதம், அரசாணை (நிலை) எண்.334 நிதி(சம்பளம்)துறை, நாள். 22.10.2022–இல் துறைச் செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வின்படி வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு செயலாளருக்காக.

13/9/2024

**நகல்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6

நிதி(கல்வி–II) துறை , சென்னை–9.

சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

www.Padasalai.Net

நகல்:-

அரசுக் கடித (efile) எண்: 8514/பி.க.5(1)/2023-1

நாள்: 13.09.2024

தகவலுக்காகவும், தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

பெறுநர்:-
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,

இணை இயக்குநர்

24/09/24